திருச்செங்கோடு நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: ரா.வாசுதேவன்.எம்.ஏ.பி.காம்.,

நக.எண்.3911/2025/எப்1, **நாள்:01.12.2025**

பொருள் : நகரமைப்பு பிரிவு – திருச்செங்கோடு நகராட்சி – 48, கைலாசம்பாளையம் கிராமம், வார்டு-C, பிளாக் 12, நகரளவை எண்.9/10-ல் உள்ள 0.80 ஏக்கர் (அ) 3238.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையப்பெற்ற குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

படிக்கப்பட்டவை :

1. உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் நக.எண்.NKL/4HOSNKLZ/37108/2025/TCP, நாள்.16.09.2025 Approval No/SWP /DTCP/ NAMAKKAL/ Layout No.231/2025.
2. மனுதாரரின் விண்ணப்ப நாள்.09.10.2025.
3. இந்நகர்மன்ற தீர்மான எண்.520, நாள்.31.10.2025.
4. ரங்கசாமி தொழில்நுட்பக் கல்லூரி, திருச்செங்கோடு நிறுவனத்தின் ஆய்வு அறிக்கை நாள்.17.10.2025.

****

உத்தரவு:-

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட, 48, கைலாசம்பாளையம் கிராமம், வார்டு-C, பிளாக் 12, நகரளவை எண்.9/10-ல் உள்ள 0.80 ஏக்கர் (அ) 3238.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையப்பெற்ற 9 குடியிருப்பு மனைகளுக்கு படிக்கப்பட்டவை (1)-ல் கண்டுள்ளவாறு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவுதாரர் தான சாசன பத்திரம் எண்.4678/2025-ன்படி மனைப்பிரிவு சாலை, பொது உபயோக இடம் ஆகியவற்றை பதிவு செய்து நகராட்சியில் ஒப்படைத்துள்ளார். மேற்கண்ட விபரத்தினை படிக்கப்பட்டவை (2)-ல் கண்ட மனைப்பிரிவுதாரரின் கடிதத்தில் தெரிவித்துள்ளார். ரங்கசாமி தொழில்நுட்பக் கல்லூரி, திருச்செங்கோடு நிறுவனத்தின் ஆய்வறிக்கையின்படி, நகர் ஊரமைப்பு துறை கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை வசதிகள் செய்துள்ளதாக படிக்கப்பட்டவை (4)-ல் கண்டுள்ளவாறு ஆய்வறிக்கை அளித்துள்ளனர்.

எனவே, மேற்கண்ட மனைப்பிரிவுக்கு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்பட்ட NKL/4HOSNKLZ/37108/2025/TCP, நாள்.16.09.2025-ல் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனையின்படி, இறுதி ஒப்புதல் வழங்க படிக்கப்பட்டவை (3)-ல் காணும் இந்நகர்மன்ற தீர்மானத்தின் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இம்மனைப்பிரிவுக்கு மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ஆணையர்,
திருச்செங்கோடு நகராட்சி.

1.12.25

பெறுநர் :

1. திரு.கே.லோகநாதன் த/பெ கதிர்வேல்,
2. திருமதி. எல்.ஜெயலட்சுமி க/பெ லோகநாதன்,

53, சாலப்பளையம்,
48, கைலாசம்பாளையம்,
திருச்செங்கோடு.
நாமக்கல் மாவட்டம்.

நகல் :

1. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு.
2. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வளாகம், நாமக்கல்.